Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்கேற்ப, உடுபுடைவகள்
RASI
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 24 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 28 ( 09 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 12

## நாடளாவிய ரீதியில்

# உணவு விநியோகம்: பாதிக்கும் அபாயம்

## வடக்கில் அரிசி கையிருப்பில் இல்லை; நேற்று 300 தொன் மட்டும் வந்தது!

யாழ்ப்பாணம், டிசம்பர் 9

நாட்டின் தென் பகுதியில் நிலைமை பாதிக்கப்பட்டு இருப்பதன் காரணமாகவும், போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்திருப்பதன் காரணமாகவும் உணவு விநியோகம் இம் மாதம் 19ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் பாதிக்கப்படும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கில் உள்ள அரசுக் களஞ்சியங்களில் தற்போது அரிசி கையிருப்பில் இல்லை என்று தெரிய வருகிறது. நேற்று 300 மெட்றிக் தொன் அரிசி மட்டும் இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. கொழும்பில் இருந்து ரயில் மூலம் இந்த அரிசி அனுப்பி வைக்கப் பட்டது.

யாழ் மாவட்டத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இங்குள்ள உயர் அதிகாரிகள் அரசாங்கத்தை நெருக்கியதை அடுத்தே இந்த 300 மெட்றிக் தொன் அரிசி இங்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்துக்கு மாதாந்தம் சுமார் இரண்டாயிரம் மெட்றிக் தொன் முதல் இரண்டாயிரத்து ஐந்நூறு மெட்றிக் தொன் அரிசி வரை தேவைப்படுகிறது.

தற்போது அரிசி எதுவும் கையிருப்பில் இல்லை என்று அறிய வருகிறது.

காங்கேசன் துறையிலுள்ள களஞ்சியத்தில் சுமார் ஐயாயிரம் மெட்றிக் தொன் அரிசியைச் சேமித்து வைக்கமுடியும்.

தற்போது வந்துள்ள அரிசி யாழ் மாவட்டத்திலுள்ள மொத்தம் இருபத்திமூன்று பலநோக்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியிலும் தட்டுப்பாடு நிலவுகிறது

மட்டக்களப்பு, டிச. 9

மட்டக்களப்பு சரக்கு ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இம் மாவட்டத்தில் அரிசி, மா, சீனி, எரிபொருள் உட்பட அத்தியாவசிப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

அரச உணவுக் களஞ்சியத்தில் கையிருப்பிலிருந்த மா. அரிசி என்பன முடிந்துவிட்டதால் வர்த்தகர்கள் வெளியிடங்க
(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல்:

## வடபகுதி பொலீஸாருக்கு இதுவரை அறிவிப்பு இல்லை!

யாழ்ப்பாணம், டிச 9

ஜனாதிபதி தேர்தல் குறித்து வடபகுதி பொலீஸாருக்கு எந்த விதமான அறிவிப்பும் இதுவரை கிடைக்கவில்லையாம்.

எனினும் கிழக்குப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

இதனிடையில் வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியப் படையினரே மேற்கொள்வார்கள் என்றும்-

அவர்களுடன் ஸ்ரீலங்காப் படையினரும் கடமையில் ஈடுபடுவர் என்றும் அறியவருகிறது.

(ஓ-10)

## வடக்கில்

## தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த 87 பஸ்களை கேட்கிறார் யாழ் அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிச 9

வடபகுதியில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு 87 பஸ்களை யாழ் அரச அதிபர் கோரியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பணிகள் தொடர்பாக யாழ் செயலகத்தில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளுடன் யாழ் அரச அதிபர் கலந்துரையாடினார்.

அப்போதே தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு பஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்துச் சபை அதிகாரிகளிடம் அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை வடபகுதியில் தேர்தல் அலுவலர்களாக கடமையாற்றுவதற்கு சில திணைக்களங்களில் இருந்து உத்தியோகத்தர்களது பெயர்ப் பட்டியல்களும் யாழ் அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஓ-10)

## யாழ்ப்பாணத்தில்

## ஈ. பி. ஆர். எல். எவ்வின் முதலாவது பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 9

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலாளர் நாயகம் திரு பத்மநாபா, முதலமைச்சர் திரு. அ.வரதராஜப்பெருமாள், நிதி அமைச்சர் பெ. கிருபாகரன், யாழ் பொறுப்பாளர் திரு. பிரேமச்சந்திரன் ஆகியோர் உட்படப் பலர் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

பொதுமக்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஈழ மக் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அனுரா-குமார் குழு வன்னிப் பகுதியில்?

கொழும்பு, டிச 9

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா. தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் ஆகியோர் அடங்கிய தூதுக்குழு ஒன்று வடபகுதி சென்றது என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் இத் தூதுக்குழுவின் பயணம் அமைந்திருப்பதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் முக்கிய பிரமுகர்களுடன் இத் தூதுக்குழு பேச்சுக்கள் நடத்தியதாகவும் சொல்லப்பட்டது.

இதனிடையில் ஐ.தே.க. குழு ஒன்றும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ததாகவும் தெரிய வருகிறது. (ஓ எ)

## உணவு முத்திரையின் பெறுமதி இரட்டிப்பு

கொழும்பு. டிச 9

உணவு முத்திரையின் பெறுமதி இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. அதிகரிப்பு இம்மாதம் தொடக்கம் அமுலுக்கு வருகிறது.

இதனால் உணவு முத்திரை பெறும் 82 லட்சம் பேர் பயனடைவர்.

இது சம்பந்தமான நடவடிக்கைகளை உடனே எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சர் ஜே. எல். சிறிசேன இது சம்பந்தமாகச் செய்த சிபார்சை அமைச்சரவை நேற்று முன்தினம் ஏற்றுக்கொண்டது. (ஓ-எ)

# கொழும்பு நகரில் நேற்றும் துறைமுகம், ரயில்வேப் பகுதி ஸ்தம்பிதம்

## ஊழியர் கடமைக்குச் செல்ல முடியாத நிலை

கொழும்பு, டிச. 9

கொழும்புத் துறைமுகமும், ரயில்வேப் பகுதியும் நேற்று முற்றாகச் செயலிழந்தன. அவற்றில் கடமைபுரிந்த ஊழியர்கள் எவரும் நேற்று கடமைக்குச் சமுகம் தரவில்லை.

இதன் காரணமாக துறைமுக வேலைகளும், ரயில்சேவையும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

ரயில்சேவை பாதிக்கப்பட்டதன் காரணமாக நேற்று அநேகமான ஊழியர்கள் கடமைக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது.

போக்குவரத்துச் சபையின் குறிப்பிட்ட சில பஸ்களே சேவையில் ஈடுபட்டன.

இதனால் கொழும்பில் அலுவலக வேலைகளும் நேற்று பெரிதும் பாதிக்கப்பட்டன.

இதனிடையில் கொழும்பில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற பீதி அங்குள்ள மக்களைப் பீடித்திருக்கிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் மக்களுக்குத் தேவையான உணவுப்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## 30,000 பேர் மரணம்!

சோவியத் யூனியனில் ஆர்மேனியா மாநிலத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறைந்தது 30 ஆயிரமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் காரணமாக அமெரிக்காவுக்குச் சென்றிருந்த சோவியத் அதிபர் கோர்பச்சேவ் தனது பயணத்தைச் சுருக்கிக்கொண்டு மாஸ்கோ திரும்பினார். (ஓ-எ)

( மற்றொரு செய்தி, 5ஆம் பக்கத்தில் )

## அரச கரும மொழி சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில்

கொழும்பு, டிச 9

தமிழ்மொழியை அரச கரும மொழியாக்கும் உத்தேசநகல் சட்டமூலம் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இச்சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கு முன்னர் இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் தொண்டமான், தேவநாயகம், அத்துலத் முதலி, பிரதமர் ஆகியோர் வலியுறுத்தினர் என்று கூறப்பட்டது. (ஓ-எ)

## முச்சந்தி முரளி




அம்மையாரின்ர கூட்டங்களிலேயும் சூடு விழத்தொடங்கியிட்டுது. அப்ப எலக்ஷன் நடத்திறதும் கஷ்டந்தான் பாருங்கோ...!

## தெற்கில் புரட்சிகர செம்படை!

கொழும்பு, டிச, 9

தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கை எடுத்து வரும் இனந்தெரியாத இன்னொரு குழு இப்போது அடையாளங் காணப்பட்டுள்ளது.

மக்கள் புரட்சிகர செம்படை என்ற பெயரில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

(ஒ-எ)

## தென் பகுதியிலும் திருடர் தொல்லை

கொழும்பு, டிச. 9

தென்பகுதியிலும் நிலைமையைப் பயன்படுத்தி திருடர்கள் இரவு வேளைகளில் கொள்ளைகளில் ஈடுபடுவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (ஓ-எ)

## மூவர் உயிரிழந்தனர்

கொழும்பு, டிச 9

தென் பகுதியில் நேற்று நடந்த இரண்டு தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் தீவிரவாத சந்தேக நபர்கள் நடத்திய தாக்குதல்களில் மூவர் உயிரிழந்தனர்.

இது பற்றித் தெரிய வருவதாவது;

மத்திய மாகாணத்தில் அரனயக்கா என்னுமிடத்தில் சுதந்திரக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

மேடையில் பேச்சாளர்கள் அமர்ந்து இருந்த
(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்தில்

## விரிவுரைகள் நேற்று நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.

நேற்றும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை தாம் கடமைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக துணைவேந்தருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களையும் ஊழியர்களையும் சமரசத்துக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (இ-5)

## பல்கலைக் கழக ஊழியர் நேற்றுமுதல் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், டிச, 9

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை அலுவலகக் கடமைகளைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்திருக்கிறது.

மேற்படி சங்கம் வெளியிட்டிருக்கும் கட்டண அறிக்கை ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் ஊழியர்களின் கடமைகளை பாதிக்கும் வண்ணம் மாணவர்கள் நடவடிக்கை எடுக்காத வகையில் நிர்வாகம் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

நேற்று வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கம் கூடித் தீர்மானிக்கும் வரை அலுவலகக்கடமைகளைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

## பொலீஸ் நிலைய தாக்குதல் முறியடிப்பு

கொழும்பு, டிச 9

மெதிரிகிரியா பொலீஸ் நிலையம் மீது நேற்றுக் காலை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அரசு அறிவித்தது.

இதில் ஒரு தீவிரவாத சந்தேக நபர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது, (ஒ-எ)

## முதல்வராக இன்று பதவிப் பிரமாணம்

யாழ்ப்பாணம், டிச. 9

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த திரு. அ. வரதராஜப்பெருமாள் இன்று ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் கொழும்பில் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்கிறார்.

(இ)

# நாளையும், நாளை மறுதினமும் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவை சேர்ந்தோருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச 9

இலங்கை வங்கி ஆஸ்பத்திரிவீதிக் கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம்ரூபா நாளையும், நாளைமறுதினமும் வழங்கப் படவுள்ளது.

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே இந்த நிவாரணம் இரு தினங்களிலும் வழங்கப் படவுள்ளது.

அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 287 குடும்பங்களுக்கும்-

ஆவரங்கால் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 299 குடும்பங்களுக்கும்-

ஊரெழு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 64 குடும்பங்களுக்கும்-

உரும்பராய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 137 குடும்பங்களுக்கும்-

உரும்பராய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 183 குடும்பங்களுக்கும்-

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 175 குடும்பங்களுக்கும்- நாளை சனிக்கிழமை கொடுப்பனவுகள் வழங்கப்படும்

இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 245 குடும்பங்களுக்கும்-

அச்சுவேலி, வடக்கு கிராம சேவையாளர்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

9 - 12 - 1988
கார்த்திகை 24
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6-19 முதல் 7-49வரை
ராகுகாலம்:-
10-49 முதல் 12-19 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

பூநாரி மரத்தடிக்கும் கொச்சுவில் சந்திக்கும் இடையில் K K S ரோட்டிலிருந்து 20 யார் தூரத்தில் 1½பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M மகேஸ்வரி(குயிலா) அவித்தான் கூல பூநாரி மரத்தடி, கொக்குவில். (7931)

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டியும் இரண்டுக்கல் ஒற்றைக் கதவு பேபிசைஸ் இரும்புப் பெட்டியும் உடன் விற்பனைக்கு உண்டு. யவுன எல ரேடிங் பிஸோர்ஸ். No 7, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். (8080)

நல்ல நிலையிலுள்ள Honda C B I 25 Twin (Allay Wheel) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. நாகேந்திரராசா, சோதிட திருமண சேவை இல 6 நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (8046)

5: K V. A C, 230 V டீசல், ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. நா சிவபாலமூர்த்தி, பாதிரி கோவிலடி லேன், கே. கே. எஸ். ரோட், கொக்குவில். (8062)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரண் நூலகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

## வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் கிறிஸ்மஸ் புதுவருட, பிறந்தநாள், திருமண வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கும், கூடுதலாக வாழ்த்துக்கள் தெரிவு செய்வோருக்கும் விசேட கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (8044)

## தேவை

புரொயிலர் கோழி மொத்தமாக உடன் தேவை. நேரில் 8 30a.m 9.30 a m இடையில் தொடர்பு கொள்ளவும். மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி 224 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (C/889)

நடனம் வாய்ப்பாட்டு வீணை, வயலின், புல்லாங்குழல் ஆகியபாடங்கள் தரம் I இலிருந்து ஆசிரியர் தரம் வரை கற்பிப்பதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 30 - 12 88 கலாலயா, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம் (C/886)

## வீடு தேவை

வேம்படி பள்ளிக்கூட சுற்றுடலில் (1 மைல்) தனி அல்லது பகுதி வீடு வாடகைக்கு உடன் தேவை. 402 C/o, உதயன். (8202)

## உடன் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறீம் ஹவுஸ் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமிக்க வெயிட்டர்கள் உடன் தேவை. தொடர்பு- யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ், 352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (8042)

## மணமகன் தேவை

வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் சைவ வேளாள குலத்தைச் சேர்ந்தவருமாகிய 37 வயதுடைய மகளுக்கு தொழில் புரியும் மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 10 C/o உதயன் யாழ்ப்பாணம். (8084)

## திருமண சேவை

இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு மணமக்கள் தேவையாயின் தகுதிக்கும், தரத்திற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். சாதகக் குறிப்பும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 'சாயி மங்கள' 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8056)

## தவறிவிட்டது

ஜெகதீசன் கிரிதரன் ஆகிய நான் எனது 682810548 V இலக்க முடைய அடையாள அட்டையை 5 12-88 அன்று தவறவிட்டுவிட்டேன் கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். (8201)

## கல்வி

ஆண்டு 10, 11 கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் ஆண்டு 5 புலமைப் பரீட்சை ஆண்டு 6 தொடக்கம் 9 வரையான கணிதம் விஞ்ஞானம், ஆங்கிலம் விசேட கவனிப்பு பட்டதாரியால் கற்பிக்கப்படும் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (8050)

## வகுப்புகள்

### மிருதங்க வகுப்புகள்

தரம் I தொடக்கம் ஆசிரியர் தரம் வரையிலான வகுப்புக்களுடன் வருடந்தோறும் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் மிருதங்க பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்றவகையில் பயிற்றுவிக்கப்படும். வகுப்புகள் சனி ஞாயிறு பி ப 2.00 மணிக்கு நடைபெறும், கலாலயா (பதிவு செய்யப்பட்டது) விக்ரோரியா வீதி, யாழ்ப்பாணம். (C/887)

### துரிதமீட்டல் வினவிடை வகுப்பு

க பொ த (சா த) Dec 88 கணிதம் திரு நா. நல்லையா (யாழ் இந்து கணித ஆசிரியர்) ஆரம்பம். 09 12 1988 வெள்ளிக்கிழமை. திங்கள், புதன், வெள்ளி காலை 9 00மணி 190 முதலாம் குறுக்குத் தெரு (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) 8072)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# LONDON EXAMS

MAY / JUNE 1989

**C. I. M. A**

| | |
|---|---|
| STAGE II | 10 12-88 |
| STAGE III | 10-12 88 |

**A. A. T (LONDON)**

| | |
|---|---|
| INTER | 17 12 88 |
| FINALS | 17-12-88 |

**I. D. P. M**

| | |
|---|---|
| PART II | 17 12 88 |

**I. A. B**

| | |
|---|---|
| INTER | 17-12-88 |
| FINALS | 17 12 88 |

இவற்றுடன் Institute of Bankers வகுப்புக்களும்

ஆரம்பம்: 17-12 88

(C I M. A Stage I. A A T Prelim & I D. P. M Part I வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன)

உங்கள் பதிவுகட்கு:

RESULT ORIENTED INSTITUTE IN NORTH

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane, Hospital Road, Jaffna. (C/900)

+
J M. J

எஸ்.பி. அன்ரன் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

# யோர்தான்

யோர்தான் நாட்டில் பண்ணைத் தொழிலாளர்களாகவும் உதவியாளர்களாகவும் FARM WORKERS and GENERAL HELPERS பணியாற்றுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வளமிக்க யோர்தான் நாட்டில் சிறந்த சம்பளத்துடன் பணிபுரிய

**அரியதோர் சந்தர்ப்பம் இது.**

முதற்குழுவில் இருபது பேர் அடுத்த இரு வாரங்களுக்கிடையில் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

சம்பளம்

600 - 800 அமெரிக்க டொலர்கள்.

**இரண்டு வருட ஒப்பந்தம்**

அமெரிக்க நிர்வாகிகளின் தலைமையில் இயங்கும் ஸ்தாபனம்.

மற்றும்

சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# எஸ்.பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக) (C/896)


## நன்றி நவிலல்



**பி. ஜே. அமிர்தநாயகம்**

(இளைப்பாறிய ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி)

05-11-88 இல் இறைபதமடைந்த அமரர் பி ஜே. அமிர்தநாயகம் அவர்களின் மரணச் சடங்குகளில் அன்னாரின் வீட்டிலும் சம்பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்திலும் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திலும், இறுதியாக சேமக்காலையிலும் பங்குபற்றிச் சிறப்பித்த யாழ்/மேற்றிராணியார் அவர்கட்கும், குருக்கள் கன்னியர் ஆசிரியர்கள், நண்பர்கள் மாணவர்கள் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், எமது அழைப்பை ஏற்று 31ம் நாள் நினைவு அஞ்சலித் திருப்பலிகளில் பங்குபற்றி அன்னாரது ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சிய அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி அ அமிர்தநாயகம்,
பிள்ளைகள், சகோதரிகள்.
உறவினர்.

(8197)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



**செல்வி குழலி தனபாலசூரியர்**

(மாணவி: யாழ். கன்னியர் மடம் ம. வி)

| படைப்பு: | அழிப்பு: |
|---|---|
| 08 - 04 - 1972 | 09 - 11 1988 |

கூடி மகிழ்ந்து கல்வியைக் கற்க
கல்விச் சாலைதனைத் தேடிக் - காலையில்
ஓடி நீ தங்கையுடன் வந்ததேனோ
நாடி வந்த காலன் நடுவழியில் காத்திருந்து
துடி துடிக்கப் பறிப்பான் என குழலி - நீ
எண்ணியிருந்தாயா நாம் தான் எண்ணி-
யிருந்தோமா
மாணவர் நாம் இன்று கதிகலங்கி வாடிட
கருத்துடன் கற்பித்த ஆசிரியர்
மனமொடிந்து நின்றிட
கருணை மிக்க அதிபர் ஆறுதலின்றி வாட
எங்குற்றாய் குழலி நீ
இறைவனடி சென்றாயோ
குழலினிது யாழினிது கூறும்
இப்பாரில்லை உன் குரலை
கேட்பதுதான் எப்போ
காத்திராத வேளைதனில்
காலனுடன் சென்ற உனக்கு
பார்த்திருக்கும் அதிபர் ஆசிரியர்
மாணவர்களின் கண்ணீர் அஞ்சலி
யாழ்/ கன்னியர் மடம் ம. வி

எமது மகளின் அகால மரணம் சம்பந்தமாக உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும், எமது துயரில் பங்கேற்றவர்களுக்கும் எமது பணிவான நன்றி.

இன்று நடைபெறும் அந்தியேட்டியில் யாவரையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

5, வேவட்பர் ஒழுங்கை, அரியாலை யாழ்ப்பாணம். சி. தனபாலசூரியர் (யாழ் கலைத் திணைக்களம்) (8195)


# Diploma in Nursing
## தாதிகள் பயிற்சி நெறி

10ஆம் பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

- சிறந்த விரிவுரையாளர் குழு
- விஷேட பாமலி ஆங்கில வகுப்புக்கள்

உங்கள் பதிவுகட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane Hospital Road, Jaffna. (C/902)

# LONDON EXAMS

**C I.M.A, A.A.T**
**I.D.P.M, I.A.B**

Pitmans - Book - Keeping
Computer - Basic
Hotel Management

வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகிக்கொண்டிருக்கின்றன.

அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்கள்

ARULLANANDA
BERTRAM
DAYANANDA
JAYARATNAM
KAILASAPILLAI
NAVARENDRAN
PUSHPA
SIVAPATHASUNDARAM
THAVARATNASINGAM

SUCCESS ASSURED

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3 ஆம் குறுக்குவீதி, (O L. R தேவாலய மேற்குப்பக்கம்) யாழ்ப்பாணம். (C/899)


இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

## பிரிவுபசார வைபவம்

1985ஆம், 1986ஆம், 1987ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவம் 12 12-1988 திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

நன்றி.
செயலாளர்
மாணவர் மன்றம்

(8086)


# வீட்டுப் பணிப்பெண்கள் உடன் தேவை

Hong Kong நகருக்கு 35 வயதுக்குட்பட்ட வீட்டுப் பணிப் பெண்கள் தேவை. ஆங்கில அறிவு அவசியமில்லை. சம்பளம் H. K. $ 2300 (ரூபா 9 00)

2 1/2 மாதத்திற்குள் அனுப்பி வைக்கப்படுவர்.

அண்மையில் எடுத்த பாஸ்போட் சைஸ் புகைப்படங்களுடன் மற்றும் அத்தாட்சிப் பத்திரங்களுடன் 11-12 88இல் பி. ப. 3½ மணிக்குள் உடன் தொடர்பு கொள்ளவும்:

**K. பாலமுருகன்**
குளிப்பன் லேன்,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

ரவி ஸ்ரோர்ஸ்
செட்டியார்மடம் சந்தி,
வட்டுக்கோட்டை. (8087)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக
கிறிஸ்தவ மாணவர்களின்

## கிறிஸ்தோதய இன்னிசை வழிபாடு

1988 மார்சழி மாதம் 10 ஆம் திகதி
சனிக்கிழமை காலை 9 30 மணி

**தூய தோமா ஆலயம்**

(யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம்
வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.
அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

(8182)



உ
சிவமயம்

## குருக்கள் தேவை

யாழ். மாவடி ஞானவைரவர் கோயிலுக்கு 3 காலப் பூஜை செய்வதற்கு குருக்கள் தேவை. தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். 15 ஆம் திகதிக்கு முன்பு நேரில் வரவும்

**சி. முத்துக்குமாரு,**
175. K K. S. ROAD,
JAFFNA.

(8061)


# புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்தின்றி மக்கள் பெரும் அவதி

புதுக்குடியிருப்பு, டிச.9

புதுக்குடியிருப்பு அரசாங்க வைத்தியசாலையில் அத்தியாவசியமான மருந்து வகைகள் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த அவல நிலையை விளக்கி வைத்திய அதிகாரி டாக்டர் சி. இராசலிங்கம் வைத்தியசாலையில் உள்ள விளம்பரப் பலகையில் வைத்தியசாலையில் தட்டுப்பாடாக உள்ள மருந்து வகைப் பட்டியலை பகிரங்கப் படுத்தியுள்ளார்.

புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. ஜெ. எட்வேட் றெட்பாறு, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு நாளாந்த தேவைக்குப் போதுமான மருந்து வகைகளைத் தந்துதவுமாறு வேண்டியுள்ளார்.

(ச-126)

## பாலருக்கு இலவச மதிய உணவு

பளைப் பகுதியில் உள்ள பாலர் பாடசாலைச் சிறுவருக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் அவற்றிற்கான பாத்திரங்கள் பளை உதவி அரசாங்க அதிபரினால் அவ்வப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் இந்திராபுரத்தில் உள்ள அன்னை இந்திரா பாலர் பாடசாலையில் இலைக்கஞ்சி உணவு வழங்க உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற்கொள்வதாக இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி. கனகசபை தெரிவித்தார். (சி)

## ஐவர் சித்தி

யாழ். புனித மரியாள் வித்தியாலய (ஒ. எல். ஆர்) மாணவர்கள் ஐவர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர். (இ-51)

## சுட்டுக்கொலை

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த தம்பையா. சிவகுமார் என்பவர் இனந் தெரியாதவர்களினால் உரும்பராயில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-72)


வேகமாக விற்பனையாகின்றன!

## ENGLISH TEACHERS EXAMINATION

உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

அஸ்ரன் வெளியீடு:
விலை ரூபா 47. 50

1982, 83, 84, 87இல் நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாவிடைகளையும் உள்ளடக்கியது.

கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்.
(C/ 842)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்

A/L 90

புவியியல்
க. குணராஜா - (9 மணி)
இந்திய வரலாறு (History)
அருள்நங்கை
புதிய பிரிவு
ஆரம்பம்: 10-12-1988

(C/891)


பேராசிரியர் சந்திரசேகரத்தின் மறைவு

# தமிழ் இனத்துக்கும் கல்வி உலகுக்கும் பேரிழப்பாகும்

## முதலாண்டு நினைவுவிழாவில் உபவேந்தர் உரை

யாழ்ப்பாணம், டிச 9

பேராசிரியர் சந்திரசேகரம் தனது மனதில் சரியெனப்பட்ட கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியதுடன் அந்தக் கருத்துக்கள் செயல்வடிவம் பெறப் பாடுபட்ட சிறந்த கல்விமான். அவரது மறைவு கல்வி உலகுக்கும் தமிழ் இனத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற பேராசிரியர் சந்திரசேகரத்தின் முதலாவது ஆண்டு நினைவு விழாவில் உரையாற்றும்பொழுது யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அழகையாதுரைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவர் திரு. வி. ஆறுமுகம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

உபவேந்தர் து. துரைராஜா தனது உரையில் மேலும் கூறியதாவது:

'பேராசிரியர் சந்திரசேகரத்தின் கருத்துக்கள் இனவேறுபாடுகளைக் கடந்த நிலையில் சிங்கள மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

எதனையும் தெளிந்த சிந்தனையுடன் எடுத்துக் கூறிய அமரர் சந்திரசேகரம்வாய்ப்பேச்சுடன் மட்டும் நின்றுவிடாது செயல்வடிவம் பெறவும் பாடுபட்டார்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக கல்விப்பீடத் தலைவர் திரு. வி ஆறுமுகம் உரையாற்றும்போது 'யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விப்பீடத்தை ஆரம்பிப்பதற்கு எத்தனையோ எதிர்ப்புக்கள் இருந்த போதிலும் பேராசிரியர் அந்த எதிர்ப்புக்கள் எல்லாவற்றையும் முறியடித்து யாழ்ப்பாணத்தில கல்விப் பீடத்தை நிறுவஉழைத்தார்' எனச் சொன்னார்.

கலாநிதி சபா ஜெயராசா உரையாற்றும் போது பேராசிரியர் சந்திரசேகரம் வடக்கு கிழக்கு என்ற பிரதேச வேறுபாடுகளைக் கடந்து தமிழ் இளைஞர்களின் கல்வியில் முதல்நிலை பெற வேண்டும் என உழைத்தார் என்றார். (ச-11)

## அமுலாக்கல் திட்டங்கள்

கன்னாகம், டிச 9

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் 1989 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் அமுலாக்கல் திட்டங்கள் பற்றி கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

அடுத்த வருடம் வட்டார ரீதியில் நடைபெறும் நிகழ்ச்சித் திகதிகள் விண்ணப்ப முடிவு திகதிகள் என்பவை போன்றன அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. [இ-27]

## புதிய சட்டத்தரணி



யாழ்ப்பாணம், டிச 9

திருமதி சாந்தகுமாரி சிவபாதம் பிரதம நீதியரசர் பரிந்த ரணசிங்க, மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பட்டதாரியான இவர், இராமநாதன் கல்லூரி, காரைநகர் டாக்டர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற டாக்டர் அம்பலவாணர், திருமதி அம்பலவாணர் ஆகியோரின் இளைய புதல்வியுமாவார்.


## அரசாங்க அறிவித்தல்

சுகாதாரசேவைகள் பிராந்தியபணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

### 1989 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்குத் (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் (சுர்க்கு, விளக்குமாறு. தும்புத்தடி உட்பட)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்.
4. மரத்தளபாடங்கள்
5. உருக்குத் தளபாடங்கள்
6. மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
7. கட்டிடப் பொருட்கள்

பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. வேறு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.
4. கிராமோதைய சபைகள்.
5. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்.

**விண்ணப்பித்தல்**

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 16 - 12 - 88 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1989 ஆம் ஆண்டிற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(C-474)



## FORTUNA ENTERPRISES

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

Labour Licence No: 79

1, தைவான்

தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12, 000/ + இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது - 22 — 32

2. குவைத்

தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD — 3300 + இருப்பிடவசதி

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

நாடவேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(C/879)



## சரியான நிறை தவறுது காட்டும் யூனியன் மேடைத் தராசுகளை சிங்கர் விநியோகிக்கிறது!



யூனியன். சரியான நிறையைத் தவறுது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன, வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை
அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி × 100 கி.

நீங்கள் தவணைக்கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

விலை: ரூ. 11,215/-

Minds/SA/5

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.



## மொத்த புடைவை வர்த்தகர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

பலதரப்பட்ட போலி 'ஷேர்ட்டிங்ஸ்' 'சீமா ஷேர்ட்டிங்ஸ்' என சந்தைப்படுத்தப்படுவதாக அறிய வந்துள்ளோம். எனவே எமது அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் பெயர்களையும் முகவரிகளையும் இங்கே குறிப்பிடுகின்றோம்.

"சீமா" ஷேர்ட்டிங்ஸ்ஸை இவர்களிடம் மாத்திரமே கொள்வனவு செய்து கொள்ளுங்கள், எமது 'சீமா' ஷேர்ட்டிங்ஸ் 1 - 12 - 1988 தொடக்கம் 'சீமா' லேபல் பொறிக்கப்பட்டு வெளிவருகிறது. இதனை அவதானித்து எமது ஷேர்ட்டிங்ஸை கொள்வனவு செய்யுங்கள்:

**எமது விநியோகஸ்தர்கள்:**

**யாழ்ப்பாணம்:**

1. லேடன் காமன்ஸ், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
2. T. குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ், 42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம்.
3. E. விஜயரத்தினம், 'மைலன்ஸ்' கட்டடம் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**கொழும்பு:**

1. இரத்தின ஸ்ரோர்ஸ், 180/4, கெய்சர் வீதி, கொழும்பு.

**சீமா சில்க் இன்டஸ்ரீஸ்**
லிமிட்டெட்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தந்தி: "சீமா சில்க்" தொலைபேசி: 23170
— உயர்ந்த ரக ஷேர்ட்டிங்ஸ் தயாரிப்பாளர்

(8059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணம்

# விண்ணப்பப்படிவ விநியோக அட்டவணையில் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச 9

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரண விண்ணப்பப் படிவங்களை விநியோகிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த தின அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் செயலகம் இயங்குவதால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்ந்தவர்கள் செவ்வாய்க்கிழமைகளிலும் —

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கு புதன்கிழமைகளிலும்—

வேலணை ஊர்காவற்றுறை நெடுந்தீவு, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கு வியாழக்கிழமைகளிலும் மேற்படி நிவாரண விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நூற்றுக்கணக்கான பொதுமக்கள் செவ்வாயன்று யாழ் செயலகத்தில் குழுமியிருந்தனர். (ஐ-5)

## வடமராட்சி கிழக்கில் தோற்றுநோய்

தாளையடி, டிச 9

வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களில் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம், சின்னமுத்து ஆகிய தொற்று நோய்கள் பரவுகின்றன.

ஆழியவளை என்னும் இடத்தில் ஏற்கனவே ஒரு குழந்தை வயிற்றோட்டம் நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதன்பின் இறந்து விட்டது. (ச- 144)

## சமூக இலக்கியப் பணிகளின் களமாக விளங்கும் கல்வி நிறுவனம்

### அரை தசாப்த நிறைவு விழாவில் உரை

வெறும் ரியூட்டரி என்பதற்கு மேலாக சமூக இலக்கியப்பணிகளின் களமாக ஊரெழு, மதி அக்கடமி விளங்குகின்றது. மதி அக்கடமிபலஉட்பிரிவுகளைக் கொண்டு விரிவடைந்து தனித்தன்மையுடன், முன்மாதிரியாகத் திகழ்வது பாராட்டுக்குரியது.

மேற்கண்டவாறு, ஊரெழு மதி அக்கடமி மண்டபத்தில் அண்மையில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர், கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மதி அக்கடமியின் அரை தசாப்த நிறைவு விழாவில், யாழ். சமூகவியல் விரிவுரையாளர் திரு. நாகலிங்கம் சண்முகலிங்கம் புகழாரம்சூட்டினார்.

இவ்விழாவில திருவாளர் பே. பரமேஸ்வரநாதன், ச. கதிரவேலு. ஊரெழு க. முத்துக்குமாரசாமி, வேல் அமிர்தன், கலாநிதி இ. பாலசுந்தரம், ச. விநாயகமூர்த்தி, க. ஆனந்தராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

மதி கல்வி நிலைய திறமைசாலிகளான மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ பாலசுந்தரம் அவர்களால் பரிசில்களும் வழங்கப்பட்டன (ஒ)

## நீதிமன்றப் பரிசீலனையில் மூன்று சட்டமூலங்கள்

கொழும்பு, டிச 9

மூன்று சட்டமூலங்கள் உயர்நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுப்பி வைத்திருக்கிறார்

அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 122 (11) க்கு உட்பட்டதாக அவை இருக்கின்றனவா? என்பதை அறிவிக்கும்படி ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருக்கிறார்.

இச்சட்ட மூலங்கள் நீதியரசர்கள் இ.ஏ.டி. அத்துக்கோரள, எச்.ஏ. ஜி டி. சில்வா, எம். ஜமீல் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வர இருந்தன.

அனுப்பப்பட்டுள்ள சட்டமூலங்கள் வருமாறு:

1. ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தும் ஒரு சட்டமூலம்.

2. 1988 இன் மாகாண சபைத் தேர்தல் சட்டம் இல: 2 ஐத்திருத்தும் ஒரு சட்டமூலம்.

3. 1981 இன் நாடாளுமன்றத் தேர்தல் சட்டம் இல. 1ஐத் திருத்தும் சட்டமூலம். [இ-எ]

## அதிகாரம் தாருங்கள் செய்துகாட்டுகிறேன்

### பிரேமதாஸ சொல்கிறார்

எனக்கு அதிகாரம் தாருங்கள் இன்று நிலவும் பதற்றநிலையை நீக்கி அமைதியை நிலைநாட்டுவேன்.

பிரதமர் பிரேமதாச அப்புத்தளையில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

டிசம்பர் 19க்குப் பின் அமைதியை நிலைநாட்ட முடியும் என்றால் இப்போது அதைச் செய்வது தானே என்று திருமதி சிறிமாவோ கேட்கலாம் இன்று நான் அதிகாரமற்ற பிரதமர். 19இல் அதிகாரம் கிடைத்தால் வீதிக்குக் குறுக்கே மரம் வைத்தல், குண்டுவைத்தல், கடைகளை மூடுவது, பயமுறுத்துவது போன்றவற்றை நிறுத்தி விடுவேன்—

இப்படி திரு பிரேமதாச மேலும் தெரிவித்தார். (இ-எ)

கூட்டுறவுச் சங்கங்களுக்கு

## சீமெந்து விநியோகத்தில் மாற்றம்


மின்சார பற்றாக்குறை காரணமாக முன்னர் அறிவித்தபடி சனிக்கிழமைகளில் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் சிமெந்து விநியோகம் நடைபெறமாட்டாது. ஆனால் 07- 12- 1988 ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு நாளும் ஆறு சங்கங்களுக்கு ஒவ்வொரு லோட் (சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் தவிர்ந்த) வழங்கப்படும் என தொழிற்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. அதே வேளை கிழமையில் இரண்டு லோட்டுக்கு மேல் ஒரு சங்கத்திற்கு வழங்கப்பட மாட்டாது எனவும் அதுவும் முன் கூடுதலாக தமதுதொழிற்சாலையில்சிமெந்துபெற்றசங்கங்களுக்குமட்டுமேவழங்கப்படுமெனவும் ஏனைய வாடிக்கையாளரான சங்கங்களுக்கு ஒரு லோட் மட்டுமே வழங்கலாமெனவும், மின்சார விநியோக பற்றாக்குறை காரணமாகவே இவ்வொழுங்கைப் பின்பற்ற வேண்டியிருக்கிறதெனவும், இதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோருவதாகவும் தவிர்க்க முடியாத சிரமங்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றனர்.

சி. சிவமகாராசா,
தலைவர்,
யாழ் தேசிய கூட்டுறவுச்சபை
07- 12- 1988

(C/892)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### பொன்னம்பலம் குலசேகரம்பிள்ளை

[உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள நுழைவாயில் பரிசோதகர்]

அன்னையின் மடியில்: 24 04.1938 — ஆண்டவன் அடியில்: 09.11.1988

அயராது உழைத்து பாசத்துடன் எம்மை வளர்த்துக் காத்திட்ட எம் அருமைத் தந்தையே! ஆண்டாண்டு சென்றிடினும் உங்கள் நினைவு எம் உள்ளத்தில் நின்று நீங்காதையா!

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர்கள் நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். 09-12-88 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

78/1, அருளம்பலம் லேன்,
அரியாலை.

[8079]

---

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. நாகலிங்கம் நாகேந்திரராசா

(இயந்திரப் பொறியியலாளர், அல்ஜீரியா)

மலர்வு: 08 - 03 - 1946 — உதிர்வு: 09 - 12 - 1987

திதி: 27 - 11 · 1988

எங்கள் அன்புத் தெய்வமே!

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம்மனது. மாறவில்லை உங்கள் நினைவு. முன்னால் வந்து முகம் பார்த்து ஆசையுடன் அப்பா என்று கூவி அழைக்கு முன்பே மின்னல் முழங்காமல் எங்களை ஏங்க வைத்து, தந்தையாரின் மரணச் சடங்கில் தனது கடமையைச் செய்யத் தனது காரில் எம்முடன் சென்ற போது நடுத்தெருவில் வந்த காலன் இரக்கமின்றி கணப்பொழுதில் எம்மிடமிருந்து சூறையாடிவிட்டானே! அப்பா என்று சொல்வதற்கே அருகதையற்று விட்டோம். உங்களைப் போல அரவணைக்க எமக்கு இவ்வுலகில் யாரும் இல்லையே. எங்கள் அப்பாவே! என்றும் எங்கள் உள்ளத்தில் உலாவிவருவீர்கள். ஓராண்டு ஓடியும் தாங்கொணாத்துயரில் மூழ்கி பேசமுடியாமல் உள்ளோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி,
ஆசைக்குழந்தைகள்.
நயந்தா, நர்மதா, நக்கீரன்.

''லிங்கஸ்தான்''
மீசாலை வடக்கு,
மீசாலை.

(8069)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி கதிர்காமு சோதிமுத்து

அன்னை மடியில்: 14 01-1902 — ஆண்டவன் அடியில்: 16-11-1988

இவர் காலஞ்சென்ற ஆள்வார் கதிர்காமுவின் அருமை மனைவியும், இராசசிங்கம் (இளைப்பாறிய அத்தியட்ச சுகாதாரப் பரிசோதகர்), பாலசுந்தரம் (இளைப்பாறிய பிரதம றெயில் வாகனப் பாதுகாவலர்), திருமதி சரவணபவன் அரசம்மா, காலஞ்சென்ற திருமதி பசுபதி பூரணம் (ஆசிரியை), பாலசிங்கம் (இளைப்பாறிய காவல்துறை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற விஜிதம்பி (இராணுவ உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வன் ஆள்வாப்பிள்ளை (செல்வரத்தினம்) அவர்களின் தாயாருமாவர்.

ஈமச்சடங்குகள் 17-11-1988 இல் தும்பளை பருத்தித்துறையில் நடைபெற்றன. இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். அந்திசஷ்டிக் கிரியைகள் எதிர்வரும் 16-12-1988 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குத் தும்பளையில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அத்தருணம் கலந்து அம்மையாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதை வேண்டி நிற்கும்:

பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து
க. இராசசிங்கம்
க. பாலசுந்தரம் (மூத்த மக்கள்)

(8063)

---

## 40 ஆம் நாள் நினைவஞ்சலி



### தேவதாஸ் ஜஸ்ரின் லிபேரியஸ்

பிறப்பு: 23-06-1971 — இறப்பு: 30-10 1988

காளை வயது வருமுன் கட்டழகுத் தோற்றமும் நாளை நிலை அறிய நன்மழலை உள்ளமும் பாலைச் சிரிப்பும் பண்பான வார்த்தைகளும் வேளை வரும் முன்னே வீணாக அழிந்தார்.

உன்னை என்றும் எங்களால் மறக்க முடியாது.

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

20, மகேந்திரபுரம்,
பாஷையூர்.

(8078)

---

## 15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

### றேஸ் சற்குணம் நாகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை, புங்குடுதீவு)

தோற்றம்: 8 - 3 - 1914
மறைவு: 9 - 12 - 1973

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்:

நா. சற்குணலிங்கம்
(படப்பிடிப்பாளர்)
9, 2ஆம்ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/477)

---

## 51 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு அப்பாத்துரை சபாரத்தினம்

(இளைப்பாறிய பிரதம எழுது வினைஞர்)

தோற்றம்: 13- 04- 1914 — மறைவு: 20- 10- 1988

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புமொழி பரப்பி எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே! எமக்கு நல்வழி காட்டி, அன்பு அறநெறி பண்பு, பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஐம்பத்தியொரு நாட்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அகல் விளக்காய் அணையாத்தீபமாய் என்றும் ஒளிர்கிறது மீளாத்துயில் கொண்டாலும் உங்கள் நினைவை என்றும் நினைவில் நிறுத்துகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆயாக்கடவை ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

[8184]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

**பொருள்:**

போர்வந்த போது களத்தில் தள்ளி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவை விட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24005
யாழ்ப்பாணம் 22073
09-12-1988 த. பெ. இல 23


## தட்டுப்பாட்டை நீக்க...

வடக்கில், குறிப்பாகக் குடா நாட்டில் உணவுப் பொருள் பற்றாக்குறை உண்டாகி இருக்கிறது. அரிசி, கோதுமை மா ஆகிய பிரதான உணவுப் பொருள்களின் விநியோகம் பெருமளவில் குறைந்துள்ளது.

அரிசி மா, பாண் மற்றும் சீனி என்பவற்றின் விலைகள் "ஆகாயத்துக்கு" உயர்ந்து விட்டன. கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் கடைகள் ஆகிய இரு விநியோகப் பிரிவுகளிலும் அரிசி, மா என்பன போதிய அளவில் கையிருப்பில் இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையில் நடந்துவரும் குழப்பத்தினால், சிவில் நிர்வாகத்தில் ஏற்பட்ட தடங்கல் நிலையினால், போக்குவரத்து இடைஞ்சல்களாலேயே இங்கு உணவுப் பொருள் பற்றாக்குறை தோன்றி இருக்கிறது.

வடக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் இதே நிலைதான்.

எனினும் தெற்கில் படையினரை ஈடுபடுத்தி உணவுப் பொருள் விநியோகம் உட்பட அத்தியாவசிய சேவைகள் பாதிப்பில்லாமல் நடக்க, அரசு பார்த்துக் கொள்கிறது. இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் வருவதால் அரசு அது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தும் என்பதை விரித்து விளக்க வேண்டியதில்லை.

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரையில், அரசுக்கு அதுவிடயத்தில் போதிய அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. மட்டக்களப்புப் பிரதேசத்திலும் அரிசி, மா, சீனி என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வந்திருக்கும் செய்தி அதனையே உறுதிப்படுத்துகிறது.

கொழும்புக்குப் போக்குவரத்துத் தடைப்பட்டால் தமிழ்ப் பிரதேசங்களில் உணவுத் தட்டுப்பாடு என்ற நிலைமை இப்போது உண்டானது அல்ல. தமிழர் பொருளாதாரம் கடந்த பல தசாப்தங்களாக இதே நிலையில் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பெரும் துரதிஷ்டமானதும் ஆகும்.

குறிப்பாக அரிசி, மா, சீனி ஆகிய பிரதான உணவுப் பொருள்களை இங்கு போதியளவு உற்பத்திசெய்ய முடியவில்லை என்பது ஒன்று. அவற்றுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தக்கூடிய உணவு வகைகளை உற்பத்தி செய்வதில் தானும் அக்கறையோ திட்டமிடுதலோ, ஊக்குவிப்போ இல்லை என்பது இரண்டாவதாகும்.

இத்தகைய பரிதாபத்துக்குரிய பொருளாதார நிலையை மாற்றுவதற்கு வழிபிறக்க வேண்டும் தமிழ் மக்களுக்கு பூரண அதிகாரம் உள்ள தன்னாட்சி அதற்கு அவசியம் என்பதை எவரும் மறுத்துரைக்க இயலாது.

எனினும் இது போன்ற நெருக்கடிக் காலங்களில் மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடிய உணவு வகைகளான, அதிக மழை தேவைப்படாத குரக்கன், வரகு, மரவள்ளி சோளம் போன்ற பயிர்வகைகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டியது இப்போதுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும். அவற்றின் தேவை உணர்ந்து விவசாயிகளும் அவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

நெருக்கடியான காலங்களில் பதுக்கல் செய்வது. அதன்மூலம் செயற்கை விலையேற்றத்தை உண்டாக்குவது போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டிய சமூக உணர்வும், பொறுப்பும் வர்த்தகர்களுக்கு அவசியம் என்பதையும் இவ்வேளை நினைவூட்டுகிறோம். 'தவிச்சமுயல் அடிப்பது' போல மக்களைச் சுரண்ட எண்ணுவதே பெரும் பாவமூட்டையை உங்கள்மீது சுமத்திவிடும் என்பதை வர்த்தகர்களே மறந்துவிடாதீர்கள்.

இப்போது ஏற்பட்டிருக்கும் உணவுப் பொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, வீதிப்போக்குவரத்தைக் காரணம் காட்டாமல் கப்பல்கள் மூலமாவது அவற்றைத் தருவிக்க அரசாங்க அதிபரும் அவரைச் சார்ந்த அதிகாரிகளும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

நெருக்கடி காலங்களில் மக்கள் பட்டினி கிடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமெனின் அரிசி, மா, சீனி ஆகிய பிரதான உணவுப் பொருள்களையாவது, குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தேவையான அளவுக்கு எப்போதும் கையிருப்பில் வைத்துக் கொள்வது நல்லதல்லவா? இந்தக் கூத இருப்பு (Buffer Stock) முறை மக்களுக்கு அடிக்கடி உணவுக் கஷ்டம் ஏற்படுவதை நிச்சயம் தடுக்கும்.

---

வார்ஸோ நாடுகளில் இருந்து பெருமளவில்

# சோவியத் துருப்புக்கள், போர்க்கருவிகள் வாபஸ்

# ஆப்கனிஸ்தானில் ஐ.நா. அமைதிப்படை

### ஐ.நா.வில் கோர்பசேவ் விடுத்த அறிவிப்பு

நியூயோர்க் டிச 8

சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தினார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள சோவியத் படைகள், ஆயுதங்கள் குறைப்புப் பற்றி அவர் தனது பேச்சில் வெளியிட்டார்.

தன்னிச்சையாகசோவியத் அரசு பரபுவழி ஆயுதங்களைக் குறைக்கும் என்றும் அவர் கூறினார்.

★ வார்ஸோ அமைப்பு நாடுகளில் இருந்து 10 ஆயிரம் டாங்கிகள், 8 ஆயிரத்து 500 ஆட்டிலறி ஆயுதத் தொகுதிகள், 800 சண்டை விமானங்கள் குறைக்கப்படும்.

★ 5 லட்சம் துருப்புக்களை வார்ஸோ நாடுகளில் இருந்து சோவியத் யூனியன் விலக்கிக் கொள்ளும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து மேலதிகமாக இன்னொரு 50 ஆயிரம் சோவியத் துருப்புக்கள் வாபஸாகும். இரண்டு வருடங்களில் படை வாபஸ் பூர்த்தியாகும்.

★ வார்ஸோ அமைப்பு நாடுகளில் சோவியத் யூனியனின் தற்பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய அளவு படைப் பலமே இருக்கும்.

★ ஆப்கனிஸ்தானில் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

சகல தரப்பினரும் அங்கம் வகிக்கக்கூடிய அரசு ஒன்று உருவாகும் வரை ஆப்கனிஸ்தானில் ஐ.நா அமைதிப்படை நிறுத்தப்பட வேண்டும்.

ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுமுகமாக சகல தரப்பினருக்கும் ஆயுதங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி திரு கோர்பச்சேவ் தனது உரையில் தெரிவித்தார்.

1960 இல் அப்போதைய சோவியத் பிரதமர் நிகிடா குருஷேவ் ஐ.நாவில் உரைநிகழ்த்தினார். அதன் பின்னர் ஐ.நாவில் உரையாற்றிய சோவியத் தலைவர் என்ற பெருமை திரு கோர்பச்சேவுக்குக் கிடைத்துள்ளது.

### தண்டனை குறைப்பு

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு கருணை காட்ட பாகிஸ்தான் பிரதமர் பெனசிர் புட்டோ முடிவு செய்திருக்கிறார்.

அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

சோவியத் யூனியன்:

# ஆர்மேனியாவில் பூமியதிர்ச்சி ஆயிரக்கணக்கானோர் மரணம்

மாஸ்கோ டிச 8

சோவியத் யூனியனில் இனமோதலினால் பாதிக்கப்பட்டுள்ள ஆர்மேனியா மாநிலத்தைப் பூமி அதிர்ச்சி தாக்கியது.

றிச்டர் அளவையில் 8 சக்தி கொண்ட இப்பூமியதிர்ச்சியினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. மாடிக் கட்டடங்கள் அனைத்தும் தரைமட்டமாகின என்றும் கிராமம் ஒன்று பூமி அதிர்ச்சியினால் 'காணாமற்' போய் விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஈரான் துருக்கி நாடுகளையும் இப்பூமியதிர்ச்சி பாதித்தது.

ஆர்மேனியாவில் கடந்த 80 ஆண்டுகளில் ஏற்பட்ட பெரிய பூமியதிர்ச்சி இது என்று வர்ணிக்கப்பட்டது. முதலில் அனுதாபச்செய்தியை அனுப்பியிருந்த சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்த செய்தியை அறிந்தவுடன் தனது அமெரிக்க விஜயத்தை சுருக்கிக் கொண்டு மாஸ்கோ புறப்பட்டார். (எ)

# கடல் அலையில் இருந்து மின்சாரம் 1 ஆவது மின்நிலையம் கேரளாவில்

சென்னை டிச 8

கடல் அலைகளில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் பாதிரிக் கடல் அனல் மின் நிலையம் ஒன்றைத் திருவனந்தபுரத்துக்கு அருகில் உள்ள வெளிச்சம் என்னுமிடத்தில் இந்தியத் தொழில் நுட்பக் கழகம் அமைக்க உள்ளது உலகிலேயே முதலாவது என்று கருதப்படும் இக்கடல் அனல் மின் நிலையம் அமைக்க ஒரு கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

150 கிலோ வாட்ஸ் மின் சக்தியை உற்பத்தி செய்யும் இந்த நிலையம் எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் செயற்பட ஆரம்பிக்கும் என்று இந்தியத் தொழில் நுட்பக் கழக இயக்குநர் பேராசிரியர் எஸ் எஸ் ஸ்ரீநாத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

கடலரிப்புத் தடுப்பு நடவடிக்கைகளிலும் இம்மின் நிலையம் ஈடுபடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தியா சுமார் 6 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான நீளக் கடற்கரையைக் கொண்டிருப்பதால், கடல் அலையில் இருந்து மின்சக்தி உற்பத்தி பயனளிக்கும் என்றும்பேராசிரியர் ஸ்ரீநாத் தெரிவித்தார்.

கடலுக்கு மேல் நிலையிலும் அடியிலும் காணப்படும் வெப்ப நிலை வேறுபாட்டைப் பயன்படுத்தி கடல் அனல் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தையும் இந்தியத் தொழில் நுட்பக் கழகம் உருவாக்கியுள்ளது—

இப்படி பேராசிரியர் ஸ்ரீநாத் மேலும் சொன்னார். (எ)

### சோவியத் அமைச்சர் சீன விஜயம்

டோக்கியோ, டிச 7

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவார்ட் நாட்சே அடுத்த ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரியில் சீனாவுக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

மாஸ்கோ விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய சீன வெளியுறவு அமைச்சர் கியான் கிச்சென் ஜப்பானிய அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். (எ)

### பதவி நீக்கம்

பீகிங், டிச 7

திபெத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரை சீன அரசு பதவி நீக்கஞ் செய்தது

இதற்கு காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வெளி உலகில்

---

# ஒஸியை ஆதரிக்குமாறு வாசுதேவ கேட்கிறார்

### ஏன் என்று அறிக்கையில் விளக்கம்

கொழும்பு, டிச. 9

தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள் தமிழ் பேசும் மக்கள் மற்றும் நசுக்கப்படும் மக்கள் அனைவரும் திரு ஒஸி அபயகுணசேகராவை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. வாசுதேவ நாணயக்காரா கேட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் நவசமசமாஜக் கட்சி, திரு அபயகுணசேகராவை ஏன் ஆதரிக்கிறது என்பது சம்பந்தமாக விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 40 வருடங்களாக யூ.என். பியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் தலைமையிலான அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியுள்ளதுடன் பல்வேறு மோசமான சீர்குலைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இப்போது பாசிச சக்திகளும் தலைதூக்கியுள்ளன.

கடந்த காலத்தில் மேற்படி இரு கட்சிகளில் ஒன்றைத் தெரிவு செய்வதை விட மக்களுக்கு குறிப்பிடத்தக்க வேறு மாற்றுச் சக்தி இருக்கவில்லை இக்கட்சிகளால் பல்வேறு விதத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டுவந்த தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், தமிழ் பேசும் மக்கள் ஆகியோரின் விடிவை ஓர் இடதுசாரி அரசாங்கத்தாலேயே கொண்டு வர முடியும்.

ஆனால் இடதுசாரி இயக்கம் கடந்த 20 வருடங்களாக சிங்களப் பேரினவாத கட்சிகளுடனான கூட்டாட்சி மாயையில் மூழ்கியிருந்தது.

நவசமசமாஜக் கட்சி தனது வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக ஒரு சுதந்திரமான இடதுசாரி அமைப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இந்த முன்னணியின் வேலைத்திட்டத்தில் மதசார்பின்மை மற்றும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் போன்ற நிலைப்பாடுகள் திட்டவட்டமான முறையில் இடம் பெற்றுள்ளன

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஒஸி அபேகுணசேகர இடதுசாரி வேட்பாளராகப் போட்டியிடுகிறார். இவர் ஆகக் கூடிய ஆதரவைப் பெறக்கூடிய இடதுசாரி வேட்பாளர் ஆகையால் இடதுசாரி இயக்கத்தின் முக்கியமான நன்மைகள் கருதி, நவசமசமாஜக் கட்சி அவருக்கு விட்டுக் கொடுத்தது

ஏனெனில் இடதுசாரி இயக்கமானது ஒரு வலுவான, நம்பிக்கையான மாற்று சக்தியாக வளர்ச்சியடைய வேண்டுமென்பதிலேயே நவசமசமாஜக்கட்சி அக்கறையாயிருக்கிறது. அத்தகைய வளர்ச்சியின் மூலமே முதலாளித்துவ, ஏகாதிபத்திய சார்புள்ள ஸ்ரீல. சு. கட்சியையும் யு என் பியையும் தோற்கடிக்க முடியும்

கொழும்பில்

# வங்கி நடவடிக்கைகள் பாதிப்பு: ஆராய மாநாடு

கொழும்பில் பாதிக்கப்பட்டிருக்கும் வங்கி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நிதி திட்டமிடல் அமைச்சர் ஜனாப் நயினா மரிக்கார் மாநாடு ஒன்றைக் கூட்ட விருக்கிறார்.

கொழும்பிலுள்ள வங்கிகளைச் சேர்ந்த முகாமையாளர்கள் அனைவரையும் இந்த மாநாட்டில் கலந்து கலந்து கொள்ளுமாறு நிதி திட்டமிடல் அமைச்சு கேட்டிருக்கிறது.

தென்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக வங்கி நடவடிக்கைகள் கொழும்பிலும் பாதிக்கப்பட்டன. இதனால் வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளும் மற்றும் வர்த்தகக் கொடுப்பனவுகளும் பெரும் பாதிப்புக்குளாகின

இதனால் உள்நாட்டு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்பட்டதுடன் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கங்களும் ஏற்பட ஆரம்பித்தன.

பாதிக்கப்பட்ட வங்கி சம்பந்தமாக வர்த்தக, வியாபார, பொருளாதார விவசாரங்களை எவ்வாறு ஈடு செய்யலாம் என்பது பற்றி இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும்.

சில நிதிகளில்

### விசேட அபிஷேகம்

யாழ்ப்பணம், டிச 9

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் சிவன் ஆலயத்தில் 10 ஆம் திகதி சனிக்கிழமை விசேட அபிஷேகம் சுவாமி வீதி வருதலும் நடைபெறும். (ச)

# மீனவர்களுக்கு சுழற்சி முறை வட்டியில்லாக் கடன்

குருநகர், டிச 9

குடாநாட்டுக் கரையோரப்பகுதி மீனவர்களுக்கு சுழற்சி முறையிலான வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டமொன்றை யாழ்-மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் அறிமுகம் செய்து வைத்து நடைமுறைப் படுத்தி வருகிறது

பாதிக்கப்பட்டிருக்கும் சகல கடற்றொழில் கிராமங்களுக்கும் சுழற்சி முறையில் வட்டி இல்லாக் கடன் வழங்க நடு நிலையம் விரிவான திட்டமொன்றையும் தயாரித்துள்ளது

இதுவரை ஒரு லட்சம் ரூபாவில் இருந்து மூன்று லட்சம் ரூபா வரையிலான தொகையை அவ்வப் பகுதிகளுக்குத் தந்தைகளுக் கூடாக குருநகர், பாஷையூர். நாவாந்துறை யாழ் பேராலயம், மண்டைதீவு. மயிலிட்டி. ஊரணி, மாதகல், மாதகல், சங்கடல், வலைப்பாடு, நெடுந்தீவுக் கடலோரக் கிராமங்களில் உள்ள மீனவர் சங்கங்களுக்கு வட்டி இல்லாக் கடனாக வழங்கியுள்ளன.

யாழ் மறைமாவட்ட நடுநிலைய இயக்குநர் வண பிதா எம் ஈ பயஸ் அடிகளார் இதனைத் தெரிவித்தார். (இ-51)

### மீனவர் இடமபெயர்வு

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தீவு பகுதிகளுக்கு தொழில் செய்வதற்காக மீன்பிடிஉபகரணங்களுடன் இடம்பெயர்ந்துசெல்கின்றனர்

வடமராட்சி கிழக்கில் கடல் கொந்தளிப்பாக இருப்பதாலும் வெடுபிடிகள் அதிகமாக இருப்பதாலும் அல்லைப்பிட்டி, சுருக்காட்டுவான் ஆகிய இடங்களை நோக்கி இவர்கள் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். (ஓ ச 144)

### ஒளி விழா

நவாலி மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. கே. எம் மாணிக்கம் தலைமையில் ஒளி விழா சிறப்பாக நடைபெற்றது.

அருட் திரு.லோறன்ஸ் அடிகளாரும் திரு. டபிள்யூ ஜி. அன்னப்பாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு ஜெபமும் ஆசிர்வாதமும் வழங்கினர்.

மாணவ, மாணவிகளின் நாடகம், நடனம் இடம் பெற்றன.

வித்தியாலய உப அதிபர் திரு. எஸ். நாகையா விழாவை ஒழுங்கு படுத்தினர். (ச)

# டிரான்ஸ்போமர்களுக்கு அருகில் வசிப்போர் பாதிக்கப்படும் ஆபத்து

கொழும்பு டிச 7

மின்சார டிரான்ஸ்போமர்களுக்கு அருகில் வசிப்பவர்கள் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புறுவதால் பாதிக்கப்படக்கூடிய நிலை இருப்பதாக மத்திய சூழல் அதிகார சபை உறுப்பினர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

தென் இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் வன்செயல்களில் மின்டிரான்ஸ்போமர்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு வருவது தெரிந்ததே

இதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

மிகச் சக்திவாய்ந்த நச்சு இரசாயனப் பொருள்கள். வெளியேறாத விதமாகத் தயாரிக்கப்பட்ட பெட்டிகளில் அடைக்கப்பட்டு டிரான்ஸ்போமர்களினுள் வைக்கப்பட்டுள்ளன.

வெடிகுண்டுகள் மூலம் டிரான்ஸ்போமர்கள் தகர்க்கப்படும் சமயம், இந்த நச்சுப் பொருள்கள் வெளியேறினால் அது அயலில் உள்ளவர்களின் சருமத்தினூடாகச் செல்லக்கூடும் எனவும்—

இதனால் நுரையீரல் பாதிக்கப்படலாம் எனவும், கர்ப்பிணிகளின் வயிற்றில் உள்ள சிசுக்களுக்கு நிரந்தர சேதத்தையுண்டு பண்ணும் எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### கைலாசபதி நினைவு ஆய்வரங்கு

யாழ்ப்பாணம் டிச 9

பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்குத் தொடரின் மூன்றாவது ஆய்வு இ முருகையன் தலைமையில் எதிர்வரும் 11ஆந் திகதி ஞாயிறுகாலை 9 மணிக்கு கூட்டுறவுச்சங்க சமாஜ மண்டபத்தில் (மணியடஸ் கட்டடம்) நடைபெறும்.

ஆய்வரங்கில் திரு. ந. இரவீந்திரன் "தேசிய இலக்கியக் கோட்பாடும் கைலாசபதியும்" என்னும் ஆய்வினைச் சமர்ப்பிப்பார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மல்லி கலந்த கோப்பி
யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100 gr. பக்கட்டுக்களில் வெளிவருகிறது.
1 பக்கட் விலை 10/- ரூபா. வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

# உதயன்

9 12 - 1988 வெள்ளிக்கிழமை

உழுந்து மா
பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.
தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

## கூட்டுறவுக் கடைகளில் கட்டுப்பாட்டு விலையில் மா

யாழ்ப்பாணம் டிச 9 கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக உணவு முத்திரைக்கும், பங்கீட்டு அட்டைக்கும் கட்டுப்பாட்டு விலையில் மா விநியோகிக்கப்பட்டுவருகிறது

கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

தற்போது கையிருப்பில் உள்ள மா மொத்தத் தேவையோடு ஒப்பிடும் இடத்து குறைவாகவே உள்ளது

இதனாலேயே தாராள அடிப்படையில் விநியோகிக்கப்படாமல், கட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாவை விநியோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இதேவேளை மற்றும் ஒரு கப்பலில் மா கொண்டுவரப்பட உள்ளதாகவும், அதன் பிறகு மாவை கட்டுப்பாடு இன்றி விநியோகிக்க முடியும் என்றும் கூறப்பட்டது. (ஒ 5)

நிவாரணம் பெறவிருக்கும்

## 4, 427 குடும்பங்களின் பட்டியல் நேற்று வெளியானது

யாழ்ப்பாணம் டிச 9 மீளக்குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபாவைப் பெறும் ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தோரின் குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

இந்தப் பட்டியல் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தப் பட்டியலின் படி 4 ஆயிரத்து 427 குடும்பங்கள் நிவாரணப் பணத்தைப் பெறவுள்ளன.

சாவகச்சேரி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை, ஊர்காவற்துறை உடுவில் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்களின் பட்டியலே நேற்று வெளியிடப்பட்டதாகும். (ஒ 5)

## கொள்ளையில் ஈடுபட்ட மூவர் அமைதிப்படையினரால் கைது

யாழ்ப்பாணம் டிச 9 கொள்ளையில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூவரை இந்திய அமைதிப்படையினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்

இவர்களிடம் இருந்து நகைகளும் ரொக்கப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

நாச்சிமார் கோவில் அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகைகளும் பணமும் பிரசைகள் குழுவிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ -5)

Aug. 1989 Exam.
A/L Science Classes
JAFFNA ACADEMY

க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பின் தொடங்கும் வகுப்புக்கள் Jan 1989இல் தொடங்கும் பரீட்சை முடிவுகள் தாமதித்து வருவதனால் இவ்வகுப்புகளுக்குச் சேர்க்கப்படுவோர் 4 பாடங்களிலும் ஒரு நாளிலே நடக்கும் பரீட்சையில் தோற்றி அதன் பெறுபேற்றின் முடிவில் தெரிந்து சேர்க்கப்படுவர் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கவும்.

பிரவேசப் பரீட்சை 3- 1- 1989

— Director

Jaffna Academy
376, Main Street,
Chundikuly.

(8081)

PERSONAL CLASSES
For
PHYSICS
R. சத்தியசீலன்
ZOOLOGY
R. ஈசன்
Sat / Sun, Classes ஆரம்பம்: 10 - 12 - 88
A/L 89:- 10. 30 ஒட்டமின்னியல்
A/L 90:- 11 30 பொறியியல்
A/L 89;- 12. 30 பாகுபாடு
A/L 90.- 1. 30 இழையவியல்
B. M. C. முன்லேன், யாழ்ப்பாணம்.
* (A/L 89 DAY CLASSES நடைபெறுகின்றன) ★ (C/479)

# ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டவாறு நடந்தே தீரும்

## 'இந்து' பேட்டியில் தொண்டா

சென்னை டிச 9 இலங்கை ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடந்தே திரும்.

அமைச்சர் தொண்டமான் இப்படித் தெரிவித்தார்.

மேற்கு ஜேர்மனியில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் அமைச்சர் தொண்டமான் சென்னையில் 'இந்து' செய்தியாளருக்குப் பேட்டி அளித்தார்.

அப்போதே முன் கண்டவாறு அவர் தெரிவித்தார்.

ஜனதா விமுக்தி பெரமுனவின் பயமுறுத்தல் ஜனாதிபதித் தேர்தலைக் குழப்பி விடுமா?—இப்படிச் செய்தியாளர் கேட்டார்

திரு. தொண்டமான் சொன்னதாவது;

அவர்கள் புதிதாக எதையும் செய்யவில்லை வடக்கு — கிழக்கு மாகாணங்களில் நடந்தது தான் தென்பகுதியில் நடக்கிறது.

வடமராட்சித் தாக்குதல் பற்றிய வெற்றியை விழாவாக இலங்கை அரசு கொண்டாடுகிறது.

அது வெற்றிவிழாவெனில் வடமராட்சித் தாக்குதல் போன்ற ஒன்லற ஜே வி. பி க்கு எதிராக இலங்கை அரசு ஏன் இன்னமும் நடத்தவில்லை?

ஜனாதிபதித் தேர்தல் நடக்காது என பலர் நம்புகின்றனர். நான் நினைக்கிறேன், தேர்தல் நிச்சயம் நடக்கும் என்று. தேர்தலை ஒத்தி வைக்க காரணமே இல்லை. தேர்தலை முறியடிக்கும் சக்திகள் வெற்றி பெறா.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (ஒ-எ)

நல்லூர் உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்த

## இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம். டிச 9 நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கான கொடுப்பனவுப் படிவங்கள் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமையும், 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படும்.

அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, கந்தர்மடம் ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களின் குடும்பத்தலைவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும்.

வண்ணார்பண்ணை வட மேற்கு, வண்ணார்பண்ணை வட கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் கிழக்கு, ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கும்—

சம்பந்தப்பட்டவர்கள் அகதிகளுக்குரிய ஆவணங்களுடன் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமுகமளிக்கும்படி யாழ் அரசாங்க அதிபரால் வேண்டப்படுகின்றனர். (ஒ)

உணவு...
(1ஆம் பக்க தொடர்ச்சி)
குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலா பத்து மெட்ரிக் தொன் என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

அதேசமயம் விரைவில் 950 மெட்றிக் தொன் கோதுமை மாவுடன் ஒரு கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்து சேர இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் தென் பகுதித் தீவிரவாதிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஹபறணையில் மின் கோபுரம் ஒன்றைச் சேதப்படுத்தியதும் அதனால் திருகோணமலைக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதும் தெரிந்தவையே

இதன் காரணமாகத் திருமலையிலுள்ள பிறிமா ஆலை முழு அளவில் இயங்க முடியாத நிலை தோன்றி உள்ளது

இதனால் கோதுமை மா உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனினும், நிலைமையை அனுசரித்து அரசாங்கம் அதன் முழுப் பலத்தையும், வளங்களையும் பயன்படுத்தி நாட்டின் சகல பகுதிகளுக்கும் சீரான உணவு விநியோகத்தை ஓரளவுக்காவது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன (இ-ஐ-10)

மட்டக்களப்பு,,
(1ஆம் பக்க தொடர்ச்சி)
லிலிருந்து அவற்றை எடுத்து வந்து விற்பனை செய்கிறார்கள்.

சீனி கிலோ 19 ரூபாவிலிருந்து 20 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் விநியோகிக்கப்படுகிறது

மண்ணெண்ணெய் குடும்பத்திற்கு ஒரு லீற்றர் மட்டும் விநியோகிக்கப்படுகிறது.

கறுப்புச் சந்தையில் எரிபொருள் தாராளமாகக் கிடைத்தாலும் விலை அதிகமாகவுள்ளது.

மண்எண்ணெய் லீற்றர் ரூபா 10 முதல் 15வரை.

பெற்றோல் லீற்றர் ரூபா 18 முதல் 20 வரை.

டீசல் லீற்றர் ரூபா15 முதல் 20 வரை விற்பனையாகிறது.

இதனால போக்கு வரத்து கட்டணங்களில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது (இ-21)

சில அலுவலகங்களில் மட்டும்

## அரச ஊழியருக்கு நேற்று சம்பளம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச 9 வடபகுதி அரச ஊழியருக்கான டிசம்பர் மாதச் சம்பளம் சில அலுவலகங்களில் மட்டுமே நேற்று வழங்கப்பட்டது

இம்மாதச் சம்பளத்துடன் அதிகரிக்கப்பட்ட சம்பளத் தொகையும், நவம்பர் மாதத்தின் நிலுவையும் வழங்கப்பட்டது.

சில அலுவலகங்களுக்கு தாமதமாக சுற்று நிருபங்கள் கிடைத்தன் காரணமாக சம்பளப் பட்டியல்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும்—

எனினும் திங்கட்கிழமை அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிடும் என்பதும் அறியவந்துள்ளது.

டிசம்பர் மாதச் சம்பளத்தை இம்மாதம் எட்டாம் திகதி வழங்குமாறு அரசு பணித்திருந்தது தெரிந்ததே. (ஒ-10)

## 2 சரக்கு ரயில்கள் வந்தன

யாழ்ப்பாணத்துக்கு நேற்று இரண்டு சரக்கு ரயில்கள் வந்து சேர்ந்தன

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் வந்த சரக்கு ரயிலில் 300 மெற்றிக் தொன் அரிசி கொண்டுவரப்பட்டது.

இந்த அரிசி மூடைகள் உடனடியாக ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

நேற்றுமாலை 3 30 மணி அளவில் வந்த ரயிலில் எரிபொருள் எடுத்து வரப்பட்டது.

மண்எண்ணெய் ஒரு வகனும் டீசல் இரண்டு வகனும் பெற்ரோல் ஒரு வகனும் மேற்படி எடுத்து வரப்பட்டன (ஒ-10)

## மினிபஸ் சங்கத் தலைவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் டிச 9 யாழ்ப்பாணம்—மாதகல் மினிபஸ் சேவைச் சங்கத்தின் தலைவர் கந்தையா அரசக்கோன் (வயது 50) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

பிரஸ்தாப துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று இளவாலைப் பகுதியில் நடைபெற்றது.

இவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## சர்வோதய வேலைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் டி ச. 9 யாழ் சர்வோதயக் கிளையின் வேலைத்திட்டங்கள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை சர்வோதய அதிகாரியை விடுதலை செய்யக்கோரி, சர்வோதய ஊழியர்களும், போதனாசிரியர்களும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர் எனத் தெரிய வருகிறது (ஒ-5)

கொழும்பு நக...,
(1ஆம் பக்க தொடர்ச்சி)
பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஒரு வாரத்திற்கு மேல் தேவைப்படும் அளவு உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றை பலர் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்திருந்தனர். அவர்கள் நிலை பரிதாபகரமாகிவிட்டது

மின் விநியோகம் தடைப்பட்டதால் குளிர்சாதனப் பெட்டிகள் இயங்காத காரணத்தால் உணவுப் பொருள்கள் பழுதடைந்து அவற்றை வெளியில் எறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. (ஒ-ஐ)

நாளையும் --
(1ஆம் பக்க தொடர்ச்சி)
பிரிவில் 737 குடும்பங்களுக்கும்-

கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 133 குடும்பங்களுக்கும்- நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடுப்பனவுகள் வழங்கப்படும். (ஒ-5)

மூவர்,,
(1ம் பக்கத் தொடர்ச்சி)
னர். திடீரென்று கூட்டத்திற்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் மேடையை நோக்கிச் சுட்டனர். அச்சமயம் மேடையில் இருந்த இரண்டுபேர் உயிரிழந்தனர்.

அடுத்த சம்பவம் காலியில் இடம்பெற்றது

இலங்கைமக்கள் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது

சுமார் 500பேர் திரண்டிருந்தனர். அப்போது கவனிப்பாரற்றுக் கிடந்த சைக்கிள் ஒன்றில் கட்டப்பட்டிருந்த 'டைம் பொம்' ஒன்று வெடித்தது. அப்போது ஒருவர் உயிரிழந்தார். அக்கூட்டத்தில் வேட்பாளர் திரு ஒஸி அபயகுணசேகரா பேசவிருந்தார். (எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இயக்கோப்பிள்ளை வரோணிக்கா

திருமதி இயக்கோப்பிள்ளை வரோணிக்கா (சின்னம்மா) 8-12-88 இல் காலமாகி விட்டார்.

இவர் கரவெட்டி மேற்கு காலஞ்சென்ற அ. இயக்கோப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியநாயகம் (J P மாமூலை), செலஸ்ரீன், திருமதி றெஜினா வின்சென்ற் (ஆசிரியை திரு இருதயக் கல்லூரி) இவர்களின் தாயாரும், சி.வின்சென்ற் அதிபர், திருஇருதயக் கல்லூரி) அவர்களின் மாமியாரும் ஆவார் நல்லடக்க ஆராதனை 9-12-88 காலை 9 மணிக்கு கரவெட்டியில் நடைபெறும்.

தகவல்:
வின்சென்ற்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(8089)

### திரு. கந்தையா அரசக்கோன்

(A. S. ரவல்ஸ் உரிமையாளரும் 788 மினிபஸ் சங்கத் தலைவரும்)

சந்தரோடையைப் பிறப்பிடமாகவும் பெரிய விளானை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அரசக்கோன் அகால மரணமானார். இவர் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும் லதா, சோபனா (யா/இந்துமகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-12-88 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் நாவலர் வீதி பிறவுண் வீதிச் சந்தியில் உள்ள 180ஆம் இலக்கஇல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் சோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்

தகவல்.
செ. நித்தியானந்தம்
உரிமையாளர்
மகேந்திரராஜா அன் கோ,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(8199)

### டாக்டர் இராஜரட்ணம்

(கால்நடை வைத்தியர்)

டாக்டர் இராஜரட்ணம் (கால்நடை வைத்தியர்) 5-12-88இல் காலமானார். இவர் மீனாட்சியின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு. விஜயரத்தினம், திருமதி விஜயரத்தினத்தின் அன்பு மகனும், திரு இராமலிங்கம், காலம் சென்ற திருமதி இராமலிங்கத்தினது மருமகனும், திருமதி ஜெயலட்சுமி சந்திரசேகரின் சகோதரனும், கதிரவேற்பிள்ளையின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (6-12 88) மாலை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

24/1 றேகினி றோட்,
வெள்ளவத்தை.

(8200)

+

### OBITUARY

Mrs. Victoria Rasamany Benjamin beloved wife of Mr. M. Benjamin (Rtd O. A Survey Dept.), loving mother of Zelina (Trinidad), Basil (Diesel & Motors, Colombo), Thilaga, Kamala & Shanthi (Australia), mother-in-law of Dr. R P. Ariyanayagam (Trinidad). Dr. Mrs Nirmala Benjamin (Colombo North Medical College), A St J. J. Segaraja singhe (Attorney-at Law), Balendra Nagalingam (Staff St. Benedict's College. Colombo) and Elmo Xavier (Australia), sister of late Mrs. Chellam Segarajasinghe, Mrs Thangamany Varnakulasinghe (Canada), Edwin Mariampillai and Mrs Baby Abraham expired on 8th December 1988. Funeral arrangements will be n tified later.

Informant
Edwin Mariampillai
Sound Engineers Jaffna.

83, Main Street
Jaffna.
[8090]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 9th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org